www.tamilarangam.net

# இலங்கை யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோர் பதிவு

## பதிவுகள் ஏன் ?

இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைகளையும் வன்முறைகளையும் மூடிமறைக்க இலங்கை அரசாங்கமும் அதனுடன் சார்ந்த சில நாடுகளும் பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. இவ் நடவடிக்கைகளினால் காணாமல் போனோரதும் மற்றும் பாதிக்கப்பட்டோர் பற்றிய தகவல்களும் ஏதுமின்றி பாதிக்கப்பட்டோர் அல்லல்ப்படுகின்றனர். இயலுமான தகவல்களை புலம்பெயர்வாழ் தமிழ் மக்களிடமிருந்து பெற்று அவற்றை உரிய நிறுவனங்களிற்கு ஆவண வடிவில் முறையீடுகளை சமர்ப்பிப்பதன் மூலம் ஓரளவேனும் படுகொலைகளையும் வன்முறைகளையும் வெளிச்சத்திற்கு கொண்டு வரலாம். உலகில் எங்கும் இல்லாதவாறு மனிதப்பேரழிவுகள் ஏற்பட்டும் அதனை வெளிக்கொண்டுவர முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தமிழ் மக்களாகிய நாம் தள்ளப்பட்டுள்ளோம்.





மேலும்

- காணாமல் போனோர் பற்றிய நிலையை அறியவும், அவர்களின் நிலையை உறுதிப்படுத்தவும்
- உயிரோடிருப்பவர்களை ஊர்ஜிதப்படுத்தி மேலும் உயிர் அழிவுகளிலிருந்து காக்கவும்
- குடும்பங்களை ஒன்று சேர்ப்பதற்காகவும்,எதிர்கால வாழ்விற்காக சர்வதேசத்தின் உதவியைக் கோருவதன் மூலம் மேலும் தொடரும் அழிவுகளை நிறுத்தவும்
- பாதிக்கப்பட்ட மக்களின் ஓர் வரலாற்றுப் பதிவாக பேணப்படுவதற்கும் பதிவுகளை செய்யவேண்டிய தேவையிலுள்ளோம்.

## பதிவிற்கான படிவங்கள்

சர்வதேச மனிதநேய நிறுவனங்களின் உத்தியோகபூர்வ விண்ணப்பப் படிவங்களுடன் LES VICTIMES DE LA GUERRE DU SRI LANKA படிவமும்.

## பதிவது எப்படி ?

1. பிராந்திய மட்டத்திலான தகவல் சேகரிப்பு நிலையங்களூடாக அல்லது நேரடியாக பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு அலுவலகம் வந்து பதிவது விரும்பத்தக்கது.
2. இணையத்தளத்தினூடாக- **www.tamoulobs.com rpcct.france@gmail.com**

## பதிவுகளின் இரகசியத்தன்மை Data Protection Act

இந்நாட்டின் தகவல்கள் பாதுகாப்பு சட்டவிதிகளுக்கு உட்பட்டதாகவே தகவல்களின் இரகசியத்தன்மை பேணப்படும். மேலும் மூடிய கடித உறையினுள்ளேயே விண்ணப்பங்கள் பெறப்படும். மற்றும் இத் தகவல்களின் தரவுகள் உங்கள் அனுமதியுடனேயே மேலதிக மனிதநேய நிறுவனங்களுக்கு அனுப்பப்படும்.

## பதிவிற்காக தேவைப்படும் தகவல்கள் :

1) பாதிக்கப்பட்டவரின் பெயர், நிரந்தர விலாசம், தற்காலிக விலாசம், பாதிக்கப்பட்டவர்களின் புகைப்படங்கள் (இருப்பின்), கடைசியாக தொடர்பு கொண்ட விபரம்,

2) சம்பவம் பற்றித் தெரிந்திருப்பின் சம்பவம் நடைபெற்ற திகதி, நடந்தசம்பவம், எப்படி நீங்கள் அறிந்தீர்கள்,
தகவல் தந்தவரின் முழுவிபரம்,

3) தகவல் தருபவரின் உறவு விபரம் - குடும்ப அங்கத்தவர்/உறவினர்/நண்பர்

4) 1948ம் ஆண்டு காலத்திலிருந்து சிறிலங்கா பேரினவாத அரசின் பயங்கரவாத நடவடிக்கைளினாலும், இந்திய அமைதிப்படையினரின் (IPKF) காலத்திலும் படுகொலை செய்யப்பட்டவர்கள், காணமல் போயிருப்பவர்களினது விபரம்.

> முக்கியம் : இதற்கு முன்னர் வேறு உதவி நிறுவனங்களின் மூலமாகவோ அல்லது இணையத்தளங்கள் மூலமாக பதிவுகளை மேற்கொண்டிருப்பினும் மீண்டும் இவ்மத்திய பதிவு நிலையத்தினூடாக பதிவதன் மூலம் பதிவுகளை ஒருங்கிணைக்க உதவிடுவீராக. வரலாற்றுக்கடமையாற்ற அனைவரும் ஒருமித்து செயற்படுவோமாக

**நாமிருக்கையில் யாருமற்ற அனாதைகள் அல்ல எமது தமிழ் உறவுகள் , நமக்கென்று ஒரு கடமைப்பாடு உள்ளதல்லவா? இப்பதிவுகள் காலத்தின் அவசர தேவை, புலம்பெயர் தமிழர்களின் கடமை, பாதிக்கப்பட்ட எம் உறவுகளின் அவலக்குரலை வெளிக்கொணர உதவிடும் பணி**

மேலதிக விபரங்களுக்கு: பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு: 01 43 58 11 42
TCC France - 341 Rue des Pyrénnés, 75020 Paris

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்